Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.192/2021** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW4** |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயக்குமார் |
| Father Name | : | செல்வராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | தலைமைக்காவலர், நெடுஞ்சாலை காவல் ரோந்து, இராமேஸ்வரம் |
| Religion | : | |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.07.2025

(2ம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், 1ம் எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் BNSS பிரிவு – 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது இராமேஸ்வரம் நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.11.2019ம் தேதி மண்டபம் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தபோதுமேற்படி காவல் நிலைய குற்றஎண்.187/2019 சட்ட பிரிவுகள் 489(ஏ), 489(பி). 489(சி)

இதச வழக்கின் 1ம் எதிரியை கைது செய்ய வேண்டி காவல் ஆய்வாளருடன் நான், என்னுடன் பணிபுரிந்த இரண்டாம்நிலை காவலர் 2271 கமலகண்ணன் ஆகிய மூவரும் அவினாசி சென்று ஏற்கனவே 2ம்எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவிநாசி பேருந்து அருகில் உள்ள ஸ்ரீசாய்ராம் கார்பார்க்கிங்கில் சென்று அங்கு நிறுத்தப்பட்டிருந்த TN 39 CX 1311 என்ற கருப்பு நிற பல்சர் வாகனத்தை 15.00 மணிக்கு ஆய்வாளர் கைப்பற்றி அத்தாட்சியில் நானும், கமலகண்ணன் என்பவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3.** பின்பு அங்கிருந்த 1ம் எதிரியை கைது செய்ய கணக்கன்பாளையம் அருகில் உள்ள நெடுங்பெருங்குளத்தூர் பிரிவில் தேவி என்பவரது வீட்டில் வாடகைக்கு இருந்த 1ம்எதிரியை 23.00 மணிக்கு கைது செய்து 23.30 மணிக்கு 1ம் எதிரி எடுத்து ஆஜர்படுத்திய பிரிண்டிங் மிசினை அத்தாட்சி தயார் செய்து ஆய்வாளர் கைப்பற்றினார். அப்போது தயார் செய்த அத்தாட்சியில் நானும், கமலகண்ணனும் கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4**. 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். பிறகு 1ம் எதிரியையும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் எடுத்து மண்டபம் காவல்நிலையம் கொண்டுவதற்கு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1-ம்எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

மண்டபம் காவல்நிலையத்திலிருந்து நான், ஆய்வாளர், கமலகண்ணன் ஆகிய மூவரும் எந்த வாகனத்தில் அவினாசி சென்றோம் என்றால்நிலைய ஜீப்பில் சென்றோம். நாங்கள் நேரடியாக அவினாசியில் உள்ள ஸ்ரீசாய்ராம் கார்பார்க்கிங்கிற்கு சென்று இருசக்கர வாகனத்தை கைப்பற்றினோம் என்றால் சரிதான். அவ்வாறு கைப்பற்றும்போது கார்பார்க்கிங் உரிமையாளர் மற்றும்

பாதுகாவலரை விசாரித்து வாக்குமூலம் பெற்றாரா என்றால் இல்லை. அவினாசி பேருந்து நிலையம் மக்கள் அதிகம் நடமாடும் பகுதி என்றால் சரிதான். பொதுமக்களை சாட்சியாக வைத்து இருசக்கர வாகனத்தை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியை தயார் செய்தது யார் என்றால் ஆய்வாளர்தான். பொதுவாக காவல்நிலையத்திலிருந்து வெளி ஊருக்கு பணிநிமித்தமாக சென்றால் கடவுச்சீட்டு பெற்று தான் செல்லவேண்டும் என்றால் சரிதான், ஆனால் இந்த வழக்கில் ஆய்வாளர் உடன் சென்றதால் கடவுச்சீட்டு பெற்றுச் செல்லவில்லை. 1ம் எதிரியின் வீட்டை யார் அடையாளம் காட்டியது என்றால் ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அடையாளம் கண்டோம். 1ம் எதிரி குடியிருந்த வீடு மாடி வீடா, ஓட்டு வீடா, குடிசை வீடா என்றால் டார்ச் வீடு. நாங்கள் 1ம் எதிரி குடியிருந்த வீட்டிற்கு செல்லும்போது சீருடையில் தான் சென்றோம் என்றால் சரிதான். 1ம் எதிரி குடியிருந்த வீட்டிற்கு சென்றபோது அருகில் இருந்தவர்கள் கூடிவிட்டார்கள் என்றால் சரியல்ல. 1ம் எதிரியை யார் அடையாளம் காட்டியது என்றால் ஆய்வாளர் அடையாளம் கண்டார். 1ம் எதிரியை கைது செய்தபோது அருகில் உள்ள நபர்களை ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றாரா என்றால் இல்லை. 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் யாரால் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் கைது செய்யப்பட்ட இடத்தில் வைத்து காவல் ஆய்வாளரால் தயார் செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் கணினியில் தட்டச்சுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் கைது செய்யப்பட்ட இடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றும் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து 1ம் எதிரி கொடுத்ததாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பிரிண்டிங் மிசின் வெளி மார்க்கெட்டில் சாதாரணமாக கிடைக்கக்கூடியது என்றால் தெரியாது. 1ம் எதிரியிடமிருந்து பிரிண்டிங் மிசின் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும்

சமயத்தில் கள்ள நோட்டுக்களோ, கள்ள நோட்டுக்கள் அடிக்கப்பபயன்படும் தாளோ, மையோ கைப்பற்றப்படவில்லை என்றால் மை மட்டும் கைப்பற்றப்பட்டது. பிரிண்டிங் மிசின் 1ம் எதிரியின் வீட்டில் வைத்து 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும் காவல் ஆய்வாளர் வெளி மார்க்கெட்டில் பிரிண்டிங் மிசினை வாங்கி 1ம் எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆய்வாளருடன் அவினாசிக்கு சென்று இருசக்கர வாகனத்தை கைப்பற்றவில்லை என்றும் 1ம் எதிரியின் வீட்டிற்கு சென்று 1ம் எதிரியை கைது செய்யவில்லை, ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை, பிரிண்டிங் மிசின் மற்றும் மை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றவில்லை என்றும் பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணத்தில் கையெழுத்து இட்டு ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி தயார் செய்யப்பட்டு கையெழுத்து இட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 1ம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2–ம் எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.**

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.